


13. 07. 2026

தலைப்புச் செய்திகள்

- நாட்டின் இளையோர் சக்தியின் திறனும், அறிவியல் மற்றும் ஆராய்ச்சியில் அவர்களது ஆர்வமும் ஒலிம்பியாட் வெற்றியில் பிரதிபலிப்பதாக பிரதமர் திரு. நரேந்திரமோடி தெரிவித்துள்ளார்.
- தமிழ்நாட்டில் அரசு பள்ளிகளை மேம்படுத்துவது தொடர்பான ஆலோசனை கூட்டம் முதலமைச்சர் திரு. விஜய் தலைமையில் சென்னையில் இன்று நடைபெற்றது.
- பொறியியல் படிப்பு மாணாக்கர் சேர்க்கைக்கான இணையதள கலந்தாய்வு இன்று தொடங்கியது.
- தமிழக விவசாயிகளுக்கு சம்பா தொகுப்பாக ஏக்கருக்கு 10 ஆயிரம் ரூபாய் வழங்க வேண்டும் என பா.ம.க. தலைவர் திரு. அன்புமணி வலியுறுத்தியுள்ளார்.
- ஸ்வீடனில் நடைபெறும் ATP டென்னிஸ் ஆடவர் இரட்டையர் காலிறுதிக்கு முந்தைய சுற்றில் இந்தியாவின் ஸ்ரீராம் பாலாஜி இணை இன்று களமிறங்குகிறது.

இனி விரிவான செய்திகள்

************

பிரதமர் ஒலிம்பியாட்

நாட்டின் இளையோர் சக்தியின் திறனும், அறிவியல் மற்றும் ஆராய்ச்சியில் அவர்களது ஆர்வமும் அர்ப்பணிப்பும் ஒலிம்பியாட் வெற்றியில் பிரதிபலிப்பதாக பிரதமர் திரு.நரேந்திரமோடி கூறியுள்ளார்.

கொலம்பியாவில் நடைபெற்ற 56ஆவது சர்வதேச இயற்பியல் ஒலிம்பியாட் போட்டிகளில் 5 இந்திய மாணாக்கர் தங்கப்பதக்கங்களை வென்று சாதனை படைத்துள்ளதற்கு பிரதமர் தமது சமூக வலைதள பதிவில் பாராட்டுக்களை தெரிவித்துள்ளார்.

************

பியூஷ்கோயல்

இந்தியாவின் பொருளாதார ஒத்துழைப்பை ஐரோப்பாவுடன் வலுப்படுத்தும் வகையில் மத்திய வர்த்தக தொழில் துறை அமைச்சர் திரு.பியூஷ்கோயல் ஸ்பெயின் பெல்ஜியம் ஃபின்லாந்து நாடுகளுக்கு இன்று அரசு முறை பயணம் மேற்கொள்கிறார்.

முதற்கட்டமாக ஸ்பெயின் செல்லும் அவர், அந்நாட்டு தலைமை செயல் அதிகாரிகள் பங்கேற்கும் முதலீடு மற்றும் வர்த்தகம் தொடர்பான வட்டமேஜை கூட்டத்தில் பங்கேற்கிறார்.

************

நீர் மேலாண்மை

நீர் மேலாண்மையில் நாடு தன்னிறைவு பெற ஒருங்கிணைந்த முயற்சிகளின் அவசியத்தை மத்திய

பஞ்சாயத்து ராஜ் அமைச்சக செயலர் திரு.விவேக் பரத்வாஜ் வலியுறுத்தியுள்ளார்.

புதுதில்லியில் நீர்மேலாண்மை மற்றும் நீர் பாதுகாப்பு திட்டம் குறித்த தேசிய அளவிலான பயிற்சியின் தொடக்க நிகழ்வில் உரையாற்றிய அவர், இதற்காக பல்வேறு முன்னெடுப்புகளை அமைச்சகம் மேற்கொண்டு வருவதாக கூறினார்.

************

பள்ளிகல்வித்துறை ஆலோசனை

தமிழ்நாட்டில் அரசு பள்ளிகளை மேம்படுத்துவ தொடர்பான ஆலோசனை கூட்டம் முதலமைச்சர் திரு.விஜய் தலைமையில் இன்று நடைபெற்றது.

சென்னை தலைமை செயலகத்தில் நடைபெற்ற இக்கூட்டத்தில், அரசு பள்ளிகளில் காலியாக உள்ள பணியிடங்களை நிரப்புவது,

வரும் 2031-ஆம் ஆண்டுக்குள் மாநிலத்தின் அனைத்து பள்ளி வகுப்பறைகளும் ஸ்மார்ட் கிளாஸாக மாற்றம் செய்வது,

அரசு பள்ளிகளில் 6 முதல் 12ஆம் வகுப்பு வரை உள்ள மாணாக்கருக்கு செயற்கை நுண்ணறிவு மற்றும் கால நிலை அறிவியலை பயிற்றுவிப்பது,

ஆசிரியர்களுக்கான டெட் தேர்வு உள்ளிட்டவை குறித்து ஆலோசிக்கப்பட்டது.

மாநில பள்ளிகல்வித்துறை அமைச்சர் திரு.ராஜ்மோகன், துறை அதிகாரிகள் உள்ளிட்டோர் இக்கூட்டத்தில் பங்கேற்றனர்.

************

முதலமைச்சர் குடும்ப அட்டை

சென்னை பெரம்பூரில் நடைபெறும் நிகழ்ச்சியில் 73 ஆயிரம் குடும்பங்களுக்கு புதிய குடும்ப அட்டைகள் வழங்கும் பணியை முதலமைச்சர் இன்று தொடங்கிவைக்கிறார்.

இதன் அடையாளமாக 10 பேருக்கு நியாயவிலைக்கடை பொருட்களையும் வழங்குகிறார்.

தொடர்ந்து பயனாளிகளுக்கு நலத்திட்ட உதவிகளை வழங்கும் அவர், பெரம்பூர் பெருநகர போக்குவரத்துக் கழக பணிமனையையும் ஆய்வுசெய்யவுள்ளார்.

பெரம்பூர் சட்டமன்ற அலுவலகத்தை திறந்து வைக்கும் முதலமைச்சர், அத்தொகுதி மக்களின் கோரிக்கைகளை பெறும் வகையில் புதிய அலைப்பேசி செயலியையும் இன்று அறிமுகம் செய்கிறார்.

************

பொறியியல் சேர்க்கை

தமிழ்நாட்டில் பொறியியல் படிப்பு மாணாக்கர் சேர்க்கைக்கான இணையதள கலந்தாய்வு இன்று தொடங்கியது.

அரசு பள்ளி மாணாக்கருக்கான ஏழரை சதவிகித இட ஒதுக்கீடு, மற்றும் விளையாட்டு வீரர்கள், மாற்றுத்திறனாளிகள் உள்ளிட்ட சிறப்பு பிரிவினருக்கான கலந்தாய்வு இன்றும் நாளையும் நடைபெறுகிறது.

மாணாக்கர் தங்களுக்கு விருப்பமான கல்லூரி மற்றும் பாடப்பிரிவை தேர்வு செய்யலாம் என்றும் இதற்கான ஒதுக்கீட்டு ஆணை நாளை மறுநாள் வெளியிடப்படும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

பொதுப்பிரிவினருக்கான கலந்தாய்வு வரும் 20ஆம் தேதி தொடங்கிறது.

************

மருத்துவ சேர்க்கை

தமிழகத்தில் அரசு மற்றும் தனியார் மருத்துவ கல்லூரிகளில் சித்தா, ஆயுர்வேதா, யுனானி, ஹோமியோ, யோகா, ஆயுஷ் இயற்கை மருத்துவம் ஆகிய மருத்துவ இளங்கலை பட்டப்படிப்பிற்கு நடப்பு கல்வியாண்டிற்கான மாணாக்கர் சேர்க்கை இணையவழி விண்ணப்ப பதிவு இன்று தொடங்கியது.

வரும் 31-ம் தேதிவரை இணையதளம் வாயிலாக மாணாக்கர் விண்ணப்பிக்கலாம்.

************

அன்புமணி

டெல்டா விவசாயிகளை காக்க தமிழக அரசு சிறப்பு திட்டத்தை வகுக்க வேண்டும் என்று பா.ம.க தலைவர் டாக்டர் அன்புமணி வலியுறுத்தியுள்ளார்.

காவிரி நீர் கிடைக்காததால் சம்பா சாகுபடி பாதிக்கப்பட்டுள்ளதாக குறிப்பிட்டுள்ள அவர், மத்திய அரசுக்கு அழுத்தம் கொடுத்து கர்நாடகத்தில் உள்ள அணைகளிலிருந்து

காவிரியில் தண்ணீர் திறக்க தமிழக அரசு நடவடிக்கை எடுக்க கேட்டுக்கொண்டார்.

விவசாயிகளுக்கு சம்பா தொகுப்பாக ஏக்கருக்கு 10 ஆயிரம் ரூபாய் வழங்கி அதன்மூலம் பாசன தேவைகளை சமாளித்து சம்பா சாகுபடியை உறுதி செய்ய வேண்டும் என கூறினார்.

************

பூமணி

சாகித்ய அகாடமி விருது பெற்ற மூத்த எழுத்தாளர் பூமணி உடல் நலக்குறைவால் காலமானார்.

அன்னாருக்கு வயது 79.

கரிசல் மண் மக்களின் வாழ்வியல், சமூக உறவுகள் ஊழைப்பாளர்களின் வாழ்க்கை உள்ளிட்டவற்றை தனது படைப்புகளில் பதிவு செய்தவர்.

அஞ்ஞாடி நாவலுக்காக கடந்த 2014-ஆம் ஆண்டு இவருக்கு சாகித்ய அகாடமி விருது வழங்கப்பட்டது குறிப்பிடத்தக்கது.

அன்னாரது மறைவு தமிழ் இலக்கிய உலகிற்கு ஈடு செய்ய முடியாத பேரிழப்பாகும் என்று முதலமைச்சர் திரு.விஜய் தெரிவித்துள்ளார்.

தமது ஆழ்ந்த இரங்கலை தெரிவித்துக்கொண்டுள்ள முதலமைச்சர் இலக்கிய துறையில் அன்னாரின் பங்களிப்பை போற்றி அஞ்சலி செலுத்தும் வகையில் அவரது உடலுக்கு அரசு மரியாதை வழங்கப்படும் என்று அறிவித்துள்ளார்.

************

வியட்நாம்

வியட்நாமில் படகு கவிழ்ந்து விபத்துக்குள்ளானதில் உயிரிழந்த 15 இந்திய சுற்றுலா பயணிகளின் உடல்கள் இன்று விமானம் மூலம் இந்தியா கொண்டுவரப்பட உள்ளதாக வியட்நாமில் உள்ள இந்திய தூதரகம் தெரிவித்துள்ளது.

மும்பை விமான நிலையத்திற்கு இன்றிரவு கொண்டுவரப்படும் உடல்கள் அந்தந்த மாநில அரசுகளின் ஒத்துழைப்புடன் சொந்த ஊர்களுக்கு அனுப்பிவைக்கப்பட உள்ளது.

இதனிடையே வியட்நாம் படகு விபத்தில் மீட்கப்பட்ட 16 இந்தியர்கள் இன்று பத்திரமாக தாயகம் அழைத்து வரப்பட்டனர்.

************

இருவரி

காஞ்சிபுரம் மாவட்டத்தில் ஆட்சித்தலைவர் திருமதி சினேகா தலைமையில் இன்று நடைபெற்ற மக்கள் குறைதீர் நாள் கூட்டத்தில் மாற்றுத்திறனாளிகள் நலத்துறை சார்பில் 10 பேருக்கு காதொலி கருவிகளும், 8 பேருக்கு இருசக்கர வாகனங்களையும் ஆட்சித்தலைவர் வழங்கினார்.

கள்ளக்குறிச்சி மாவட்டத்தில் தமிழ் வளர்ச்சித்துறை சார்பில் பள்ளி மாணாக்கருக்கான கட்டுரை மற்றும் பேச்சுபோட்டிகள் வரும் 15ஆம் தேதி தியாக துர்கம் அரசு ஆண்கள் மேல்நிலைப்பள்ளியில் நடைபெறும் என்று ஆட்சித்தலைவர் திருமதி பத்மஜா கூறியுள்ளார்.

திருப்பூர் மாவட்டத்தில் தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணையத்தின் குரூப் 2, 2ஏ தேர்வுகளுக்கான இலவச

பயிற்சி வகுப்புகள் உடுமலை நகராட்சி நடுநிலைப்பள்ளயில் வரும் 20ஆம் தேதி தொடங்க உள்ளது.

இதில் கலந்துகொள்ள விருப்பமுள்ளவர்கள் மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகத்தில் பதிவுசெய்துகொள்ளுமாறு ஆட்சித்தலைவர் திரு. மணீஷ் அறிவுறுத்தியுள்ளார்.

செங்கல்பட்டு மாவட்டத்தில் உலக மக்கள் தொகை தினத்தை ஒட்டி விழிப்புணர்வு பேரணியை ஆட்சித்தலைவர் திரு.வீரப்பன் துவக்கிவைத்தார்.

நூற்றுக்கும் மேற்பட்ட மருத்துவகல்லூரி செவிலியர்கள் பங்கேற்ற இப்பேரணியில், பெண்கல்வி ஊக்குவிப்பு, பாலின சமத்துவம் உள்ளிட்டவை தொடர்பான உறுதிமொழியும் ஏற்கப்பட்டது.

************

முட்டை

நாமக்கல் மண்டலத்தில் முட்டை பண்ணை கொள்முதல் விலை தொடர்ந்து அதிகரித்து வருவதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

வாய்ஸ்

************

நாகை

நாகை மாவட்டம் திருமருகல், அம்பல், மேலபோலகம், கொத்தமங்கலம் உள்ளிட்ட பகுதிகளில் விவசாயிகள் இயற்கை உரம் கலந்து நெகிழி பைகளில் வெற்றிவேர் நாற்றுகளை வளர்த்து வருகின்றனர்.

நெல்லுக்கு மாற்றாக வெட்டி வேர் சாகுபடியை தெரிவு செய்துள்ளதால் இந்த பயிருக்கு அரசு மானியம் வழங்க வேண்டும் என விவசாயி கோரிக்கை விடுத்துள்ளார்.

வாய்ஸ்

************

திருவாரூர்

புதுதில்லியில் நடைபெற்ற மாற்றுத்திறனாளிகளுக்கான வீல் சேர் கிரிக்கெட் போட்டியில் தமிழக அணியில் பங்கேற்ற திருவாரூர் மாவட்ட வீரர் அரசு வேலை மற்றும் வீடு வழங்க கோரிக்கை விடுத்துள்ளார்.

வாய்ஸ்

************

பழனி

பழனி அருள்மிகு தண்டாயுதபானி சுவாமி திருக்கோவில் நிர்வாகத்தின் கீழ் இயங்கும் தங்கும் விடுதி அறைகளை ஆன்லைனில் முன்பதிவு செய்யும் வசதி இன்றுமுதல் தொடங்கப்பட்டுள்ளதாக எமது செய்தியாளர் கூறுகிறார்.

வாய்ஸ்

************

போதை பொருள்

கிருஷ்ணகிரி மாவட்ட பார்சல் சர்வீஸ் அலுவலகங்களில் துணை காவல் கண்காணிப்பாளர் தலைமையில் மோப்ப நாய் மூலம் சரக்கு மூட்டைகள் சோதனை செய்யப்பட்டன.

போதை பொருட்கள் நடமாட்டத்தை முழுமையாக கட்டுப்படுத்தும் நோக்கில் இதுபோன்ற சோதனைகள் தொடர்ந்து நடைபெறும் என காவல்துறை தெரிவித்துள்ளது.

கள்ளக்குறிச்சி மாவட்டம் சங்கராபுரம் அருகே சரக்கு வாகனத்தில் கடத்த முயன்ற 3 டன் ரேசன் அரிசியை காவல்துறையினர் பறிமுதல் செய்தனர்.

************

வானிலை

வளிமண்டல அடுக்குகளில் மேற்குதிசை காற்று நிலவுவதால் இன்றுமுதல் 3 நாட்களுக்கு மேற்கு தொடர்ச்சி மலை மாவட்டங்களில் ஒரு சில இடங்களில் மழைக்கு வாய்ப்புள்ளதாக சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

இதனிடையே தமிழகம் புதுச்சேரி பகுதிகளில் ஆங்காங்கே அதிகபட்ச வெப்பநிலை இரண்டு முதல் நான்கு டிகிரி செல்சியஸ் வரை அதிகரிக்க வாய்ப்புள்ளதாகவும் இம்மையம் கூறியுள்ளது.

************

டென்னிஸ்

ஸ்வீடனில் நடைபெறும் ATP டென்னிஸ் ஆடவர் இரட்டையர் காலிறுதிக்கு முந்தைய சுற்றில் இந்தியாவின் ஸ்ரீராம் பாலாஜி, ஸ்வீடனின் ஆண்ட்ரே இணை – அமெரிக்காவின் Kirkov, நெதர்லாந்தின் ஸ்டீவன்ஸ் இணையை இன்று எதிர்கொள்கிறது.

************

கிரிக்கெட்

இந்திய - இங்கிலாந்து அணிகளுக்கிடையிலான முதலாவது ஒருநாள் சர்வதேச கிரிக்கெட் போட்டி பர்மிங்ஹாமில் நாளை நடைபெறுகிறது.

3 போட்டிகள் கொண்ட இத்தொடரில் 2ஆவது போட்டி வரும் வியாழக்கிழமை கார்டிஃபிலும்,

3ஆவது இறுதி ஒருநாள் கிரிக்கெட் போட்டி வரும் 19ஆம் தேதி லண்டன் லார்ட்ஸிலும் நடைபெறுகின்றன.

************

கால்பந்து

FIFA உலக கோப்பை கால்பந்து போட்டியின் அரையிறுதி ஆட்டங்கள் நாளை மறுநாள் தொடங்குகின்றன.

முதல் அரையிறுதியில் ஃபிரான்ஸ் – ஸ்பெய்னை எதிர்கொள்கிறது.

வரும் வியாழக்கிழமை நடைபெறும் இரண்டாவது அரையிறுதியில் இங்கிலாந்து - அர்ஜென்டினாவுடன் மோதுகிறது.

இறுதிபோட்டி வரும் 20ஆம் தேதி நடைபெறும்.

************

இத்துடன் இந்த செய்தியறிக்கை முடிவடைந்தது